## October 20 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பாகிஸ்தானின் தொலை உணர்வு செயற்கைக்கோள் ஒன்றையும், தனது இரண்டு செயற்கைக்கோள்களையும் தனது ராக்கெட் மூலம் சீனா விண்ணில் செலுத்தியது.
   i. இதுகுறித்து சீன அரசுக்குச் சொந்தமான ஜின்ஹுவா செய்தி நிறுவனம் கூறுகையில், 'லிஜியான்-1 ஒய்8 ராக்கெட் மூலம் பாகிஸ்தான் தொலை உணர்வு செயற்கைக்கோள் பிஆர்எஸ் எஸ்-2, இரண்டு சீன செயற்கைக்கோள்கள் (AIRSAT 03 and 04) வெற்றிகரமாக ஏவப்பட்டு, அவற்றின் சுற்றுவட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டன' என்று தெரிவித்தது.
   ii. இந்த ஆண்டு சீனா ஏவிய பாகிஸ்தானின் மூன்றாவது செயற்கைக்கோள் இது. இதற்கு முன்னர், ஜனவரியில் பிஆர்எஸ்எஸ்-1, ஜூலையில் பிஆர்எஸ்சி-இஓ1 ஆகிய பாகிஸ்தான் செயற்கைக்கோள்களை சீனர ஏவியது.
2. பிரான்ஸின் புகழ்பெற்ற லூவ்ரு அருங்காட்சியகத்தில் அரச கிரீட நகைகள் உள்பட விலைமதிப்பற்ற நகைகள் திருடப்பட்டன.
   i. உலகிலேயே மிகஅதிகமாகப் பார்வையிடப்படும் அருங்காட்சியகத்தில் நடந்துள்ள இந்தத் திருட்டு சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
   ii. ஆண்டுதோறும் 80 லட்சத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்களை ஈர்க்கும் லூவ்ரு அருங்காட்சியகம், லியோனார்டோ டா வின்சியின் 16-ஆம் நூற்றாண்டு படைப்பான மோனாலிசா உள்ளிட்ட உலகப் புகழ்பெற்ற ஓவியங்கள், சிற்பங்களைக் கொண்டுள்ளது.
3. உலக ஜூனியர் பாட்மின்டன் போட்டி (குவாஹாட்டி) மகளிர் ஒற்றையர் பிரிவில் தாய்லாந்தின் அனியபட் பிச்சிட்பிரிசஸக் சாம்பியன் பட்டம் வென்றார். இந்தியாவின் தன்வி ஷர்மா வெள்ளிப் பதக்கம் வென்றார்.
4. கப்பல்களை இயக்கத் தேவைப்படும் மின்சாரத்தை உருவாக்கும் 200 மெகாவாட் திறன் கொண்ட அணுஉலைகளை தயாரிக்கும் பணியில் இந்தியா ஈடுபட்டு வருகிறது.
   i. இதுகுறித்து மத்திய அரசின் உயர் அதிகாரிகள் கூறுகையில், 'அணுக்கரு பிளவு மூலம் ஏற்படும் வெப்பத்தைப் பயன்படுத்திறன. மின்உற்பத்தி செய்யும் வகையில் அணுஉலைகள் உருவாக்கப்படுகின்றன. இதை எங்கு வேண்டுமானாலும் நிறுவலாம். குறிப்பாக கப்பல்களிலும் பயன்படுத்திக்கொள்ளலாம்.
   ii. பாபா அணு ஆராய்ச்சிமையத்தில் 55,200 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட இரு அணுஉ லைகளைத் தயாரிக்கும் பணியில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவை அதிகப்படியான மின் தேவை உள்ள சிமென்ட் உற்பத்தி நிறுவனங்களில் பயன்படுத்தலாம்.
   iii. இந்த அணுஉலைகள் மிகவும் பாதுகாப்பானவை. அவற்றை கடற்படைக் கப்பல்களிலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
   iv. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ் அரிஹந்த், ஐஎன்எஸ் அரிகாட் ஆகிய இரு நீர்மூழ்கி கப்பல்கள் 83 மெகாவாட் அணுஉலைகள் மூலம் இயக்கப்பட்டு வருகின்றன. மூன்றாவது நீர்மூழ்கி கப்பலான ஐஎன்எஸ் அரிதமன் தற்போது சோதனை கட்டத்தில் உள்ளது.
   v. சிவில் அணுமின் சக்தி உற்பத்தியில் தனியாரையும் ஈடுபடுத்தும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
   vi. தற்போது 8.8 ஜிகா வாட்டாக உள்ள அணுமின் சக்தித் திறனை 2047-ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகா வாட்டாக அதிகரிக்கும் இலக்கை பிரதமர் மோடி நிர்ணயித்துள்ளார்' என்றனர்.

5. மாநில அந்தஸ்து உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சகத்தின் துணைக் குழுவுடன் லடாக் பிரதிநிதிகள் அக்.22-ஆம் தேதி பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.
    i. அரசமைப்புச் சட்டத்தின் 6- ஆவது அட்டவணையின் கீழ் லடாக்கை சேர்க்க வேண்டும், லடாக்குக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, லடாக் தலைநகர் லேயில் பருவநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டார்.
    ii. அப்போது அங்கு ஏற்பட்ட வன்முறையில் போராட்டக்காரர்கள் மீது காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர். இந்த வன்முறையில் காவல் துறையினர் 40 பேர் உள்பட சுமார் 90 பேர் காயமடைந்தனர்.
6. 2019-ஆம் ஆண்டின் மூன்றாம் பாலினத் தவர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் பயன்பாட்டில் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கடிந்துகொண்ட உச்சநீதிமன்றம், அவர்களுக்கான சமவாய்ப்பு கொள்கையை வகுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.
    i. தனது பாலின அடையாளம் காரணமாக உத்தர பிரதேசம் மற் றும் குஜராத்தில் உள்ள 2 கல்வி நிறுவனங்களில் பாரபட்சம் காட்டி, ஆசிரியைப் பணியில் இருந்து தன்னை நீக்கியதற்கு எதி ராக ஜேன் கௌஷிக் என்ற திரு நங்கை உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.
7. காற்று மாசுபாட்டைக் குறைக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, காலாவதியான பழைய வாகனங்களை அழிக்கும் 'ஸ்கிராப்பிங்' திட்டம் தமிழகத்தில் விரைவில் தொடங்கப்படவுள்ளது.
    i. நாட்டின் மக்கள்தொகையைவிட வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தபட்சம் இரண்டு இருசக்கர வாகனங்களாவது பயன்பாட்டில் உள்ளன. அதோடு 100-க்கு 8 குடும்பத்தினர் கார் உபயோகிப்பவர்களாக உள்ளனர்.
    ii. இந்த வாகனங்கள் வெளியேற்றும் புகை காரணமாக காற்று மாசு அதிகரிக்கிறது. இதன் விளைவாக நகரங்களில் காற்றின் தரம் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இது மக்களுக்கு பலவகை உடல் உபாதைகளை விளை விக்கிறது. மோசமான சாலைகள், எரிபொருள் தரம், பழைய வாகனங்களின் பயன்பாடு மற்றும் முறையற்ற போக்குவரத்து மேலாண்மை போன்றவை காற்று மாசுபாட்டுக்கான முக்கியக் காரணிகளாகும். அதில் அதிக பாதிப்பு பழைய வாகனங் களால் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
    iii. இதன் தீவிரத்தைக் கருத்தில் கொண்டும், புகை மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் வகையிலும், 15 ஆண்டுகளுக்கும் மேலாக இயக்கப்படும் அரசு மற்றும் தனியார் வாகனங்களின் தகுதிச் சான்றிதழை ரத்து செய்வதோடு, அவற்றை அப்புறப்படுத்தவும் மத்திய அரசு முடிவு செய்து, அதற்குரிய அரசாணையை வெளியிட்டது.
    iv. தமிழகத்தில் அமையவுள்ள ‘ஸ்கிராப்பிங்' மையத்தில் முதல் கட்டமாக காலாவதியான அரசு வாகனங்களை கழிவாக உடைத்து அப்புறப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
    v. தில்லி, மகாராஷ்டிரம், கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் காலாவதியான வாகனங்களை அப்புறப்படுத்தும் திட்டம் நடைமுறையில் உள்ளது.
    vi. தமிழகத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆரம்பநிலைப் பணிகள் தொடங்கியுள்ளன.

vii. சுமார் 3.60 தமிழகத்தில் கோடிக்கு அதிகமான வாகனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் லட்சக்கணக்கான வாகனங்கள் 15 ஆண்டுகளுக்கும் மேலாக இயக்கப்படுகின்றன. ஸ்கிராப்பிங் திட்டத்தில் காலாவதியான அரசு வாகனங்களை அழிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

viii. எனவே, முதல்கட்டமாக காலாவதியான அரசு வாகனங்களை அழிப்பதற்கான நடவடிக் தொடங்கப்படும். இதற்கான சுற்றறிக்கை அனைத்து துறைகளின் செயலர்கள் மற்றும் உயரதிகாரிகளுக்கு அனுப்பப்படும் என்றார் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர்.

8. தமிழகம், குஜராத், ராஜஸ்தான், நாகாலாந்து ஆகிய 4 மாநிலங்களில் நோட்டரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய சட்ட அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

i. இதற்காக 1956, நோட்டரீஸ் சட்டத்தில் மத்திய சட்ட அமைச்சகம் கடந்த அக்டோபர் 17-ஆம் தேதி திருத்தம் மேற்கொண்டுள்ளது.

ii. முறைகேடுகள் ஏற்படாமல் தடுக்க முக்கிய ஆவணங்களின் சாட்சிகளை அங்கீகரிக்கும் நபர்களாக நோட்டரிகள் நியமனம் செய்யப்படுகிறார்கள். இவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று மாநில அரசுகள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று மத்திய சட்ட அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

iii. மக்கள்தொகை வளர்ச்சி, மாவட்டங்கள், வட்டங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, நோட்டரி சேவைக்கான தேவை அதிகரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

iv. தமிழகத்தில் தற்போது 2,500-ஆக உள்ள நோட்டரிகளின் எண்ணிக்கை 3,500-ஆக அதிகரிக்கப்படுகிறது. குஜராத்தில் 2,900-லிருந்து 6,000-ஆகவும், ராஜஸ்தானில் 2,000-லிருந்து 3,000- ஆகவும், நாகாலாநந்தில் 200-லிருந்து 400-ஆகவும் அதிகரிக்கப்படுகிறது.

9. மத்திய அரசிடம் இருந்து நிலுவை நிதியைப் பெறும் வகையில், 'பிஎம் ஸ்ரீ" திட்டத்தில் கேரளம் இணையும் என்று அந்த மாநில பொதுக் கல்வித் துறை அமைச்சர் வி.சிவன்குட்டி தெரிவித்தார்.

i. அதேநேரம், கேரளத்தில் தற்போது நடைமுறையில் உள்ள கல்விக் கொள்கையில் இருந்து மாநில அரசு பின்வாங்காது என்றும் அவர் கூறினார்.

ii. கடந்த 2022-ஆம் ஆண்டில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட 'பிஎம் ஸ்ரீ' திட்டம், நாடு முழுவதும் குறிப்பிட்ட பள்ளிகளைத் தேர்வு செய்து, கல்வித் தரம்-உள்கட்டமைப்பை மேம்படுத்தும் முன்னெடுப்பாகும்.

iii. தேசிய கல்விக் கொள்கை-2020 அடிப்படையில் முன்மாதிரிப் பள்ளிகளை உருவாக்கும் இத்திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சிகளின் கட்டுப்பாட்டில் செயல்படும் 14,500-க்கும் மேற்பட்ட பள்ளிகள் மேம்படுத்தப்பட உள்ளன.